### 12th History Lesson 3 Questions in Tamil

## 3] இந்திய விடுதலைப்போரில் முதல் உலகப்போரின் தாக்கம்

1) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) 1908இல் ஜப்பான் ரஷ்யாவை வீழ்த்தியது.

ii ) 1908இல் இளம் துருக்கியர்களும் 1911இல் சீன தேசியவாதிகளும் மேற்கத்திய வழிமுறைகள் மற்றும் சிந்தனைகளைப் பயன்படுத்தி தத்தமது அரசுகளை அகற்றினார்கள்.

iii ) முதல் உலகப்போருடன் இந்த நிகழ்வுகளும் 1916 மற்றும் 1920ஆம் ஆண்டுகளில் இந்திய தேசியத்துக்கானப் பின்னணியை உருவாக்கின.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

2) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) சண்டைகள் பல பகுதிகளில் நடந்தபோதிலும் முதல் உலகப் போரின் முக்கியக் களமாக ஆப்பிரிக்கா விளங்கியது.

ii ) ஐரோப்பா, ஆப்பிரிக்கா மற்றும் மேற்கு ஆசியாவில் ராணுவ சேவை புரிய பெரும் எண்ணிக்கையில் இந்தியர்களை ஆங்கிலேயர்கள் பணிக்கு எடுத்தனர்.

iii ) போருக்குப்பின் புதிய சிந்தனைகளுடன் இந்தியா திரும்பிய இந்த வீரர்கள் இந்திய சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தினர்.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

3) கூற்று: பெருமளவில் பொருளாதார சிரமங்கள் ஏற்பட்டதால் இந்தியர்கள் அதிருப்தி அடைந்தனர்.

காரணம்: 367 மில்லியன் பிரிட்டிஷ் பவுண்டுகளை போர்ச்செலவுகளைச் சமாளிக்க கடனாகவும் 250 மில்லியன் பிரிட்டிஷ் பவுண்டுகள் மதிப்புக்குப் போருக்கானப் பொருட்களையும் இந்தியா அனுப்பியது.

A) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

B) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

C) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.

D) கூற்று தவறு ஆனால் காரணம் சரி

4) கூற்று: தேசிய அரசியல் தீவிரமற்று இருந்தது.

காரணம்: இந்திய தேசிய காங்கிரஸ் மிதவாத தேசியவாதிகள், தீவிரத் தேசியவாதிகள் என இருவேறு வகைகளில் பிரிந்தது பிரிட்டிஷாரின் நலன்களுக்கு ஆதரவாக முஸ்லிம் லீக் செயல்பட்டது

A) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

B) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

C) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.

D) கூற்று தவறு ஆனால் காரணம் சரி

5) பின்வருவனவற்றுள் தவறான விடையைத்தேர்ந்தெடு.

i ) 1916இல் திலகர் தலைமையில் தீவிரத் தேசிய தன்மையோடு செயல்பட்டவர்கள் காங்கிரசை கட்டுப்படுத்தினர்.

ii ) மேற்கத்திய இந்தியாவில் டாக்டர் அன்னிபெசண்ட் அம்மையார் தலைமையில் தன்னாட்சி இயக்கம் தொடங்கப்பட்டது.

iii ) தென்னிந்தியாவில் திலகர் தலைமையில் தன்னாட்சி இயக்கம் தொடங்கப்பட்டது.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

6) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) முதல் உலகப் போரின் போது காங்கிரஸ் மீண்டும் ஒன்றுபட்டது.

ii ) 1916இல் இந்துக்கள் மற்றும் முஸ்லிம்கள் இடையே கையெழுத்தான லக்னோ ஒப்பந்தம் இந்திய தேசியத்துக்கு மேலும் வலிமை சேர்த்தது.

iii ) போரின்போது மிதவாத தேசியவாதிகளின் சிந்தனைகளை மேற்கத்தியப் புரட்சிகர கருத்துகள் பெருமளவில் ஆக்கிரமித்தன.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

7) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) கொண்டுவரப்பட்ட அடக்குமுறைச் சட்டங்களில் மிகக் கொடுமையானதாக ரெளலட் சட்டம் அமைந்தது.

ii ) ரெளலட் சட்டத்தை கடுமையாக விமர்சித்த இந்தியத் தலைவர்கள் அதற்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

iii ) உள்நாட்டு நிகழ்வுகளும் குறிப்பாக சீனப் புரட்சி போன்ற நிகழ்வுகளும் இந்தியாவின் மீது தாக்கத்தை ஏற்படுத்தின.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

8) கூற்று: முதல் உலகப்போருக்குப்பின் கிலாபத் இயக்கம் தோன்றியது.
காரணம்: : முதல் உலகப்போரில் துருக்கி தோற்றதும், அதன்பின் கையெழுத்தான செவ்ரேஸ் உடன்படிக்கையின் கடுமையான விதிமுறைகளும் துருக்கியின் சுல்தானை (கலிபா) நிலைதாழ்த்திக் காட்டியது.
A) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
B) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
C) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.
D) கூற்று தவறு ஆனால் காரணம் சரி

9) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.
i ) இந்தியாவின் விசுவாசத்துக்குப் பிரிட்டன் உரிய மதிப்பளிக்கும் என்று இந்தியர்கள் நம்பவில்லை.
ii ) இந்தியாவின் சமூகம், பொருளாதாரம் மற்றும் அரசியலில் பலதரப்பட்ட பாதிப்புகளை போர் உண்டாக்கியது.
A) i ) மட்டும்
B) ii ) மட்டும்
C) i ) மற்றும் ii )
D) இரண்டும் தவறு

10) பின்வருவனவற்றுள் அயர்லாந்தில் இருந்தபோது அன்னிபெசண்ட் பங்குகொண்ட இயக்கங்கள் எவை?
i ) அயர்லாந்தின் தன்னாட்சி இயக்கம்
ii ) ஃபேபியன் சோஷலிசவாதிகள்
iii ) குடும்பக்கட்டுப்பாட்டு இயக்கங்கள்
A) i ), ii ), iii )
B) i ), ii )
C) ii ), iii )
D) i ), iii )

11) வாரணாசியில் மத்திய இந்துக் கல்லூரியை நிறுவியவர்?
A) மதன்மோகன் மாளவியா
B) அன்னி பெசண்ட்
C) ஜார்ஜ் அருண்டேல்
D) பி.பி. வாடியா

12) பிரம்மஞான சபையின் உலக அளவிலான தலைவராக பெசண்ட் அம்மையார் எந்த ஆண்டு முதல் பதவி வகித்தார்?
A) 1893
B) 1907
C) 1909
D) 1916

13) பின்வருபவர்களுள் பெசண்ட் அம்மையாரின் ஆதரவாளர்கள் யாவர்?
i ) துவாரகாதாஸ்
ii ) சி.பி. முனுசாமி
iii ) ஜம்னாதாஸ்
iv ) ஷங்கர்லால் பன்கர்
A) i ), ii ), iii ), iv )
B) i ), ii ), iii )
C) ii ), iii )
D) i ), iii ), iv )

14) பிரிட்டன் முதல் உலகப்போரில் ஈடுபடும் அறிவிப்பை எந்த ஆண்டு வெளியிட்டது?
A) 1914
B) 1915
C) 1916
D) 1917

15) கூற்று: பிரிட்டிஷார் முஸ்லீம் லீக்கை சந்தேகக்கண் கொண்டு பார்த்தனர்.
காரணம்: மையநாடுகளை ஆதரித்து முதல் உலகப்போரில் துருக்கியின் சுல்தான் நுழைந்தார்.
A) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
B) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
C) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.
D) கூற்று தவறு ஆனால் காரணம் சரி

16) சமய சுதந்திரம், தேசியக் கல்வி, சமூக மற்றும் பொருளாதார சீர்திருத்தங்கள் ஆகியவை குறித்து அன்னிபெசண்ட் பின்வரும் எதன் மூலம் எடுத்துரைத்தார்?
A) நியூ இந்தியா
B) காமன் வீல்
C) இந்தியாவின் சுதந்திரம் எப்படி பெறப்பட்டது? (How India Wrought for Freedom)
D) A) மற்றும்B)

17) கடந்த காலத்தில் ஆழமாக வேரூன்றிய தேசிய விழிப்புணர்வின் தொடக்கங்களை அன்னிபெசண்ட் பின்வரும் எதன் மூலம் எடுத்துரைத்தார்?
A) நியூ இந்தியா
B) காமன் வீல்
C) இந்தியாவின் சுதந்திரம் எப்படி பெறப்பட்டது? (How India Wrought for Freedom)
D) A) மற்றும் B)

18) இங்கிலாந்தின் கடினமான தருணம் இந்தியாவின் வாய்ப்புக்கான தருணம் என்று முழக்கமிட்டவர் யார்?
A) மதன் மோகன் மாளவியா
B) அன்னி பெசண்ட்
C) திலகர்
D) ஜார்ஜ் அருண்டேல்

19) அன்னிபெசண்ட் அம்மையார் எந்த நாட்டின் நாடாளுமன்றத்தில் இந்தியக் கட்சி ஒன்றை ஏற்படுத்த முயன்றார்?
A) அயர்லாந்து

B) அமெரிக்கா
C) இங்கிலாந்து
D) ரஷ்யா

20) அன்னிபெசண்ட் எங்கு நிகழ்த்திய உரையில் தன்னாட்சி குறித்த தனது கொள்கையை வெளிப்படுத்தினார்?
A) கல்கத்தா
B) சென்னை
C) பம்பாய்
D) இலண்டன்

21) அன்னிபெசண்ட் இந்தியாவில் தன்னாட்சி இயக்கத்தை துவக்கப்போவதாக முறைப்படி எப்போது அறிவித்தார்?
A) 1914 அக்டோபர் 25
B) 1915 அக்டோபர் 21
C) 1915 செப்டம்பர் 28
D) 1915 செப்டம்பர் 24

22) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.
i ) திலகர், பெசண்ட் அம்மையார் ஆகியோரின் முயற்சிகளால் தீவிர தேசியத் தன்மையுடையவர்களை உறுப்பினர்களாகச் சேர்க்கும் வகையில் தனது விதிமுறைகளில் காங்கிரஸ் முறையாக திருத்தம் செய்தது.
ii ) 1916 செப்டம்பர் மாதத்திற்குள் தன்னாட்சி இயக்கத்தை கையிலெடுக்குமாறு 1914இல் பம்பாயில் நடந்த மாநாட்டில் காங்கிரஸ் கட்சியைப் பெசண்ட் கேட்டுக்கொண்டார்.
iii ) அவ்வாறு செய்யத்தவறினால், தாமே தன்னாட்சி இயக்கத்தை அமைக்கப்போவதாக அவர் தெரிவித்தார்.
A) i ), ii ), iii )
B) i ), ii )
C) ii ), iii )
D) i ), iii )

23) பின்வருவனவற்றுள் தவறான விடையைத்தேர்ந்தெடு.
i ) ஒன்று திலகர் தலைமையிலும் மற்றொன்று பெசண்ட் அம்மையார் தலைமையிலும் என 1917 இல் நாட்டில் இரண்டு தன்னாட்சி இயக்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன.
ii ) இரு இயக்கங்களின் வரையறைகளும் தெளிவாக வகுக்கப்படவில்லை என்பது ஒரு குறையாகும்.
iii ) தன்னாட்சி இயக்கம் இரட்டை குறிக்கோள்களை கொண்டிருந்தது.
A) i ), ii ), iii )
B) i ), ii )
C) ii ), iii )
D) i ), iii )

24) பின்வருவனவற்றுள் தன்னாட்சி இயக்கத்தின் குறிக்கோள்/கள் எது/எவை?
i ) பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தியாவில் தன்னாட்சியை ஏற்படுத்துவது.
ii ) தாய்நாடு பற்றிய பெருமையுணர்வை இந்திய மக்களிடையே ஏற்படுத்துவது.
iii ) இந்து சமயத்தை மீட்டெடுப்பது.
A) i ), ii ), iii )
B) i ), ii )
C) ii ), iii )
D) i ), iii )

24) பின்வரும் எப்பகுதிகளில் திலகரின் தன்னாட்சி இயக்கம் செயல்பட்டது?
i ) மகாராஷ்டிரா
ii ) கர்நாடகா
iii ) தெற்கு மாகாணங்கள்
iv ) பெரார்
A) i ), ii ), iii ), iv )
B) i ), ii ), iv )
C) ii ), iii )
D) ii ), iii ), iv )

25) திலகர் தன்னாட்சி பற்றிய கொள்கைகளை பரப்பியதற்காக தமது எத்தனையாவது பிறந்த நாளில் கைது செய்யப்பட்டார்?
A) அறுபதாவது
B) எழுபதாவது
C) அறுபத்தைந்தாவது
D) ஐம்பத்தைந்தாவது

26) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?
i ) மத்திய அல்லது பிரதேச அரசிடமிருந்து அதனைச் சார்ந்த அரசியல் பகுதிகளுக்கு, அங்கு வாழும் மக்கள் அதற்கு அரசியல் ரீதியாக விசுவாசமாக இருப்பார்கள் என்ற நிபந்தனையுடன் வழங்கப்படும் தன்னாட்சி அதிகாரத்தைக் குறிக்கிறது.
ii ) பழங்கால எகிப்து அரசிலும், நவீன சீன அரசிலும் இது பொதுப்படையான அம்சமாக இருந்தது.
A) i ) மட்டும்
B) ii ) மட்டும்
C) i ) மற்றும் ii )
D) இரண்டும் தவறு

27) பின்வருவனவற்றுள் சரியான கூற்று/கள் எது/எவை?
i ) 1890 களில் அயர்லாந்தில் தன்னாட்சி இயக்கம் முடுக்கம் பெற்றது.
ii ) அயர்லாந்து அரசு சட்டத்தின் (1920) கீழ் வட அயர்லாந்தின் ஆறு நாடுகளிலும் தன்னாட்சி அமையப்பெற்றது.
iii ) தெற்கில் ஆங்கிலோ – அயர்லாந்து ஒப்பந்தத்தின் (1921) கீழ் எஞ்சிய 26 நாடுகளிலும் தன்னாட்சி அமையப்பெற்றது.
A) i ), ii ), iii )
B) i ), ii )
C) ii ), iii )
D) i ), iii )

28) பின்வருவனவற்றுள் சரியான கூற்று/கள் எது/எவை?

i ) செப்டம்பர் 1916ஆம் ஆண்டு மதராஸில் தன்னாட்சி இயக்கத்தை அன்னிபெசண்ட் தொடங்கினார்.

ii ) கான்பூர், அலாகாபாத், பனாரஸ் (வாரணாசி), மது ரை, கள்ளிக்கோட்டை, வேலூர் ஆகிய இடங்களில் இந்த இயக்கத்தின் கிளைகள் அமைந்தன.

iii) இந்தியா முழுவதும் தீவிரப் பயணம் மேற்கொண்டு தன்னாட்சி குறித்த கருத்தை அவர் பரவச்செய்தார்.

A) i ), ii ), iii)

B) i ), ii )

C) ii ), iii)

D) i ), iii)

29) "இந்தியாவின் விசுவாசத்தின் விலை இந்தியாவின் விடுதலை" என்று கூறியவர் யார்?

A) திலகர்

B) விவேகானந்தர்

C) சுபாஷ் சந்திர போஸ்

D) அன்னி பெசன்ட்

30) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i ) மதராஸில் அன்னிபெசண்ட் அம்மையாரின் தன்னாட்சி இயக்கம் மிகவும் பிரபலம் அடைந்ததை அடுத்து மதராஸ் அரசு அதனை அடக்க நினைத்தது.

ii ) தன்னாட்சி இயக்கத்தின் கூட்டங்களில் கலந்துகொள்ள ஆசிரியர்களுக்குத் தடை விதிக்கப்பட்டது.

A) i ) மட்டும்

B) ii ) மட்டும்

C) i ) மற்றும் ii )

D) இரண்டும் தவறு

31) பெசண்ட் அம்மையாருக்கு ஆதரவாக அரசப் பட்டத்தை (knighthooD) துறந்தவர் யார்?

A) காந்தியடிகள்

B) தாகூர்

C) சர். எஸ். சுப்ரமணியம்

D) வெங்கட் ராமன்

32) தன்னாட்சி இயக்கத்தலைவர்கள் விடுதலையாகாவிட்டால் சட்டமறுப்பு இயக்கத்தை அரசுக்கு எதிராகப் பயன்படுத்துவது குறித்து அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் வலியுறுத்தியவர் யார்?

A) திலகர்

B) விவேகானந்தர்

C) சுரேந்திரநாத் பானர்ஜி

D) மதன் மோகன் மாளவியா

33) யாருடைய உத்தரவின்பேரில் தன்னாட்சி இயக்க தலைவர்களை சிறைபிடித்த நடவடிக்கைகளை ரத்து செய்யக்கோரி பேரணியாகச் சென்றனர்?

A) காந்தியடிகள்

B) தாகூர்

C) சுரேந்திரநாத் பானர்ஜி

D) மதன் மோகன் மாளவியா

34) கூற்று: ஒரே இரவில் பெசண்ட் அம்மையார் விசுவாசிக்கு நிகராக மாறினார்.

காரணம்: தன்னாட்சி நிறுவனங்கள் மற்றும் பொறுப்பான அரசு என்பதே இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் குறிக்கோள் என்று புதிய வெளியுறவு அமைச்சர் மாண்டேகு 1917 ஆகஸ்டு 20இல் அறிவித்தார்.

A) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

B) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

C) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.

D) கூற்று தவறு ஆனால் காரணம் சரி

35) 1917இல் இந்திய தேசிய காங்கிரஸ் கல்கத்தா மாநாட்டிற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்?

A) திலகர்

B) வீரராகவாச்சாரியார்

C) சுபாஷ் சந்திர போஸ்

D) அன்னி பெசன்ட்

36) கூற்று: காந்தியடிகளின் சத்தியாக்கிரகப் போராட்டங்களில் முதன்முதலில் ஈடுபட்டோரில் பலர் தன்னாட்சி இயக்க உறுப்பினர்கள்.

காரணம்: தன்னாட்சி இயக்கத்தின் முக்கியத்துவம் காந்தியடிகளின் சத்தியாகிரக இயக்கங்கள் தொடங்கப்படுவதற்கு வழிவகுக்கும் வகையில் மக்களை ஒன்றுதிரட்ட தன்னாட்சி இயக்கங்கள் களம் அமைத்தன.

A) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

B) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

C) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.

D) கூற்று தவறு ஆனால் காரணம் சரி

37) அனைத்துவிதப் பிரிவுகளைத் தாண்டி பலதரப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட முதல் இந்திய அரசியல் இயக்கமாக விளங்கியது எது?

A) காங்கிரஸ்

B) தன்னாட்சி இயக்கம்

C) முஸ்லிம் லீக்

D) ஒத்துழையாமை இயக்கம்

38) 'Indian unrest' என்ற புத்தகத்தின் ஆசிரியர் வேலண்டைன் சிரோலிக்கு எதிராக அவதூறு வழக்கு தொடுத்தவர்?

A) திலகர்

B) வீரராகவாச்சாரியார்

C) சுபாஷ் சந்திர போஸ்

D) அன்னி பெசன்ட்

39) வி.கே. கிருஷ்ணமேனன் என்பவரால் தன்னாட்சி இயக்கம் எவ்வாறு பெயர் மாற்றம் செய்யப்பட்டது?

A) இந்து முஸ்லீம் லீக்
B) பார்வர்ட் லீக்
C) காமன்வெல்த் லீக்
D) இந்திய லீக்

40) பின்வருவனவற்றுள் சரியான கூற்று/கள் எது/எவை?
i ) முதல் உலகப்போருக்கு முந்தைய ஆண்டுகளில் இந்தியாவில் அரசியல் நிலைமை ஒழுங்கற்று இருந்தது.
ii ) மிதவாத தேசியவாதிகள் மற்றும் முஸ்லிம் லீக்கின் ஆதரவை பெறும் நோக்கிலும் தீவிர தேசியவாதிகளைத் தனிமைப்படுத்தும் நோக்கிலும் பிரிட்டிஷார் மாண்டேகு செம்ஸ்போர்ட் சீர்திருத்தங்களை நிறைவேற்றினர்.
iii ) மிதவாத தேசியவாதிகள் பொறுத்திருந்து பார்ப்பதுஎன்ற கொள்கையைப் பின்பற்றினர்.
A) i ), ii ), iii )
B) i ), ii )
C) ii ), iii )
D) i ), iii )

41) பின்வருவனவற்றுள் சரியான கூற்று/கள் எது/எவை?
i ) தங்களுக்கு வழங்கப்பட்ட தனித் தொகுதிகளை முஸ்லிம் லீக் வரவேற்றது.
ii ) 1913இல், முஸ்லிம் லீக்கில் ஜின்னா உட்பட புதிய தலைவர்கள் சிலர் இணைந்தனர்.
iii ) ஜின்னா முஸ்லிம்களுக்காக அதிக சீர்திருத்தங்களைக் கோரினார்.
A) i ), ii ), iii )
B) i ), ii )
C) ii ), iii )
D) i ), iii )

42) பின்வருவனவற்றுள் சரியான கூற்று/கள் எது/எவை?
i ) இந்தியாவில் புரட்சிகர தேசிய செயல்பாட்டுக்கு உகந்த நிலைமைகளை இரண்டாம் உலகப்போர் உருவாக்கியது.
ii ) போரில் பிரிட்டனின் சிரமத்தைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்த புரட்சியாளர்கள் விரும்பினர்.
iii ) கதார் இயக்கம் அவற்றின் வெளிப்பாடுகளில் ஒன்றாகும்.
A) i ), ii ), iii )
B) i ), ii )
C) ii ), iii )
D) i ), iii )

43) பின்வருவனவற்றுள் சரியான கூற்று/கள் எது/எவை?
i ) இரண்டாம் உலகப்போர் விடுதலைப்போரில் பெரும் தாக்கத்தைக் கொண்டிருந்தது.
ii ) முதலில் பிரிட்டிஷ் அரசு இந்திய ஆதரவு பற்றிக் கவலைப்படவில்லை.
iii ) மேற்காசியா மற்றும் ஆப்பிரிக்கா நோக்கி போர்ச்சூழல் நகர்ந்த பிறகு இந்திய ஆதரவை எதிர்பார்க்க பிரிட்டிஷார் நிர்ப்பந்திக்கப்பட்டனர்.
A) i ), ii ), iii )
B) i ), ii )
C) ii ), iii )
D) i ), iii )

44) 1915 இல் காங்கிரசின் வருடாந்திர மாநாடு எங்கு நடைபெற்றது?
A) கல்கத்தா
B) சென்னை
C) பம்பாய்
D) பெல்காம்

45) பின்வருவனவற்றுள் சரியான கூற்று/கள் எது/எவை?
i ) காங்கிரசும் முஸ்லிம் லீக்கும் 1916ஆம் ஆண்டு நவம்பர் மாதம் லக்னோவில் சந்தித்தனர்.
ii ) இம்பீரியல் சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்து மற்றும் முஸ்லிம் உறுப்பினர்கள் அரசப்பிரதிநிதிக்கு (வைசிராய்) எழுதிய கடிதம் குறித்து விவாதித்தன.
iii ) போருக்குப் பிந்தைய சூழலில் இரண்டு சமூகங்களுக்கும் அனுமதிக்கப்படவேண்டிய பிரதிநிதித்துவத்தின் எண்ணிக்கை ஆகியன குறித்து இரு கட்சிகளும் ஒப்புக்கொண்டன.
A) i ), ii ), iii )
B) i ), ii )
C) ii ), iii )
D) i ), iii )

46) 1916ஆம் ஆண்டு தங்களுடைய வருட மாநாடுகளை லக்னோவில் நடத்திய அமைப்புகள் எவை?
i ) முஸ்லிம் லீக்
ii ) தன்னாட்சி இயக்கம்
iii ) காங்கிரஸ்
A) i ), ii ), iii )
B) i ), ii )
C) ii ), iii )
D) i ), iii )

47) 1916ஆம் ஆண்டு காங்கிரஸ் வருட மாநாடுக்கு தலைமை வகித்தவர் யார்?
A) அம்பிகா சரண் மஜும்தார்
B) வீரராகவாச்சாரியார்
C) பெரோஸ் மேத்தா
D) அன்னி பெசன்ட்

48) பின்வருவனவற்றுள் சரியான கூற்று/கள் எது/எவை?
i ) இந்து – லீக் ஒப்பந்தம் என்று பிரபலமாக அழைக்கப்பட்ட ஒப்பந்தத்தின் கீழ் காங்கிரஸ் மற்றும் முஸ்லிம் லீக் – ஐ ஒன்றிணைப்பதில் அன்னிபெசண்ட் அம்மையாரும் திலகரும் முக்கியப் பங்காற்றினார்கள்.
ii ) இந்த ஒப்பந்தத்தின் போது ஜின்னா குறிப்பிடத்தக்க பங்காற்றினார்.
iii ) நவம்பர் 1916இல் கல்கத்தாவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் டிசம்பர் 1916இல் நடந்த காங்கிரஸ் மற்றும்

முஸ்லிம் லீக்கின் வருடாந்திர மாநாடுகளில் உறுதி செய்யப்பட்டன.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

49) பசிபிக் பிரதேச இந்துஸ்தான் அமைப்பு யாரைத்தலைவராக கொண்டு நிறுவப்பட்டது?

A) பகத்சிங்

B) உத்தம் சிங்

C) சோஹன் சிங் பக்னா

D) லாலா ஹர்தயாள்

50) பின்வருவனவற்றுள் சரியான கூற்று/கள் எது/எவை?

i ) அமெரிக்கா மற்றும் கனடாவில் குடியேறிய சீக்கியர்களே பெரும்பாலும் கதார் கட்சியில் இடம்பெற்றிருந்தனர்.

ii ) 'கதார்' என்ற பத்திரிகையையும் இக்கட்சி வெளியிட்டது.

iii ) 1912 நவம்பர் முதல் தேதி இந்தியாவில் இது பதிப்பிக்கப்பட்டு வெளியானது.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

51) பின்வருவனவற்றுள் சரியான கூற்று/கள் எது/எவை?

i ) இந்திய சுதந்திரப் போராட்டத்தில் கதார் இயக்கம் மிக முக்கிய அத்தியாயமாகும்.

ii ) கோமகடமரு (Comagatamaru) என்று பெயரிடப்பட்ட கப்பல் இந்தியாவில் இருந்து குடியேறிவர்களுடன் டிரினிடாட்டில் இருந்து திரும்பியது.

iii ) இந்தியா திரும்பியவுடன் பிரிட்டிஷ் போலிசாருடன் ஏற்பட்ட மோதலில் அந்தக் கப்பலில் இருந்த பல பயணிகள் கொல்லப்பட்டனர்.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

52) பின்வருவனவற்றுள் லக்னோ ஒப்பந்தத்தின் அம்சங்கள் எவை?

i ) நிர்வாகம் மற்றும் நிதி விஷயங்களில் மத்திய கட்டுப்பாட்டில் இருந்து மாகாணங்கள் சுதந்திரமாகச் செயல்படவேண்டும்.

ii ) மத்திய மற்றும் மாகாண சட்டமேலவைகளின் உறுப்பினர்களில் 4/5 பங்கு நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்

iii ) 1/5 பங்கு நபர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும்.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

53) பின்வருவனவற்றுள் லக்னோ ஒப்பந்தத்தின் அம்சம் அல்லாதது எது/எவை?

i ) மாகாண மற்றும் மத்திய சட்டப்பேரவைகளின் 2/6 உறுப்பினர்கள் நியமனம் செய்யப்படவேண்டும்.

ii ) மத்திய நிர்வாக சபை உட்பட நிர்வாக சபை உறுப்பினர்களில் 1/2 பங்கு நபர்கள் அந்தந்த சபைகளின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியர்களாக இருக்கவேண்டும்.

iii ) மாகாண மற்றும் மத்திய சட்டப்பேரவைகளின் 4/6 உறுப்பினர்கள் பரந்துபட்டவாக்குப்பதிவின் மூலம் தேர்ந்தெடுக்கப்படவேண்டும்.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) i ), iii )

D) iii ) மட்டும்

54) லக்னோ ஒப்பந்தம் குறித்த கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i ) மத்தியசபை தேர்தல்களில் முஸ்லிம்களுக்கு தனித்தொகுதிகள் வழங்க காங்கிரசும் ஒப்புக்கொண்டது.

ii ) இந்து மற்றும் சீக்கிய சிறுபான்மையினருக்கு சில இடங்கள் வழங்கப்பட்ட பஞ்சாப் மற்றும் வங்காளம் தவிர அனைத்து மாகாணங்களிலும் அவர்களுக்கு சாதகமாக முன்னுரிமைகளை வழங்கவும் காங்கிரஸ் ஒப்புக்கொண்டது.

iii ) கிலாபத் இயக்கம் மற்றும் காந்தியடிகளின்ஒத்துழையாமை இயக்கம் ஆகியவற்றில் இந்து – முஸ்லிம் ஒத்துழைப்புக்கு இந்த ஒப்பந்தம் வழியமைத்தது.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) iii ) மட்டும்

55) லக்னோ ஒப்பந்தம் குறித்த கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) தங்களது சபைகள் நிறைவேற்றிய தீர்மானங்களுக்கு ஏற்ப மாகாண மற்றும் மத்திய அரசுகள் நடக்க கடமைப்பட்டுள்ளன.

ii ) கவர்னர்ஜெனரல் அல்லது ஆளுநர் சபைகளின் தடுப்பாணை அதிகாரம் பெறும் பட்சத்தில் அந்தத் தீர்மானம் ஈராண்டுக்கும் குறைவான இடைவெளியில் மீண்டும் நிறைவேற்றப்படும் பட்சத்தில் அது செயல்பாட்டுக்கு வரும்.

A) i ) மட்டும்

B) ii ) மட்டும்

C) i ) மற்றும் ii )

D) இரண்டும் தவறு

56) லக்னோ ஒப்பந்தம் குறித்த கீழ்க்கண்டவற்றுள் தவறான கூற்று எது?

i ) இந்திய அரசுக்கும் வெளியுறவு அமைச்சருக்கும் உள்ள உறவுகளும் தன்னாட்சி (டொமினியன்) தகுதியுடைய பகுதியின் காலனி செயலருக்கும் இந்தியாவுக்கும் உள்ள உறவுகளும் ஒத்திருக்கவேண்டும்.

ii ) ஏகாதிபத்திய அரசு அலுவல்களுடன் தொடர்புடைய எவரும் சம நிலை பெற்றிருக்கவேண்டும்.

iii ) இந்து – முஸ்லிம் வேற்றுமைக்கும் விடுதலை இயக்கத்துக்கும் லக்னோ ஒப்பந்தம் வழிவகுத்தது.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) iii ) மட்டும்

57) கூற்று: காங்கிரஸ் மற்றும் லீக் ஒற்றுமை கிலாஃபத் மற்றும் ஒத்துழையாமை இயக்கத்தின் போது அதன் உச்சத்தை அடைந்தது.

காரணம்: லக்னோ உடன்படிக்கையானது காங்கிரஸ் மற்றும் லீக்கில் இருந்த படித்த வகுப்பினர் ஒரு பொதுவான குறிக்கோளுடன் இணைந்து செயல்பட முடியும் என்பதை நிரூபித்தது.

A) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

B) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

C) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.

D) கூற்று தவறு ஆனால் காரணம் சரி

58) புரட்சிகர இயக்கங்கள் குறித்த கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i ) காங்கிரசை ஒத்த தளத்தில் வன்முறையைக் கையில் எடுத்து ஆங்கிலேய ஆட்சியை அப்புறப்படுத்த முயற்சி செய்த புரட்சிகர குழுக்களும் உருவாகின.

ii ) ஆட்சியை அப்புறப்படுத்த முயற்சி செய்த புரட்சிகர குழுக்களும் உருவாகின.

iii ) பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தொடங்கி ஒத்துழையாமை இயக்கத்தின் காலகட்டம் வரை அது முடுக்கத்தைப் பிடித்தது.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) iii ) மட்டும்

59) பின்வரும் எப்பகுதிகள் புரட்சிகர செயல்பாட்டின் தீவிரக் களமாக அமைந்தன?

i ) மகாராஷ்டிரா

ii ) வங்காளம்

iii ) பஞ்சாப்

iv ) பீகார்

A) i ), ii ), iii ), iv )

B) i ), ii ), iii )

C) ii ), iii )

D) ii ), iii ), iv )

60) பொருத்துக:

A) குற்ற உளவுத்துறை – 1) 1908

B) பத்திரிக்கைகள் (குற்றங்களுக்குத் தூண்டும்) சட்டம் – 2) 1910

C) தேசத்துரோக கூட்டங்கள் தடுப்புச் சட்டம் – 3) 1911

D) இந்திய பத்திரிகைகள் சட்டம் – 4) 1903

A B C D

A) 1 2 3 4

B) 4 2 3 1

C) 4 1 3 2

D) 2 3 4 1

61) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) வெளிநாடுகளில் இருந்த சில புரட்சியாளர்களின் தொடர்பில் சில இந்திய தேசியவாதிகள் இருந்ததாக பிரிட்டிஷார் சந்தேகப்பட்டனர்.

ii ) வெளிநாட்டினரின் நுழைவுக்கு கட்டுப்பாடுகளை விதிக்கும் வெளிநாட்டினர் அவசரச்சட்டம் 1919இல் இயற்றப்பட்டது.

A) i ) மட்டும்

B) ii ) மட்டும்

C) i ) மற்றும் ii )

D) இரண்டும் தவறு

62) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) இரண்டாம் உலகப்போரின்போது தேசியவாத மற்றும் புரட்சிகர நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்தியப் பாதுகாப்பு ஒழுங்குமுறைகள் சட்டம் இயற்றப்பட்டது.

ii ) உள்ளூர் அரசு நியமித்த மூன்று ஆணையர்கள் அடங்கிய சிறப்புத் தீர்ப்பாயங்கள் சந்தேகத்துக்கு இடமானவர்கள் மீது வழக்குத் தொடர இந்தச் சட்டம் அனுமதித்தது.

A) i ) மட்டும்

B) ii ) மட்டும்

C) i ) மற்றும் ii )

D) இரண்டும் தவறு

63) கீழ்க்கண்டவற்றுள் இந்தியப் பாதுகாப்பு ஒழுங்குமுறைகள் சட்டத்தின் விதிமுறைகளை மீறுவோருக்கு விதிக்கப்பட்ட தண்டனைகள் எவை?

i ) மரண தண்டனை விதிப்பது

ii ) வாழ்நாள் முழுவதற்குமாய் நாடுகடத்துவது

iii ) பத்தாண்டுகள் வரையிலான சிறைத்தண்டனை

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) iii ) மட்டும்

64) பாதுகாப்பு ஒழுங்குமுறைகள் சட்டத்தின் அடிப்படை கூறுகளைக் கொண்டு புதிதாக உருவாக்கப்பட்ட சட்டம் எது?

A) இந்திய பத்திரிகைகள் சட்டம்

B) தேசத்துரோக கூட்டங்கள் தடுப்புச் சட்டம்

C) குற்ற உளவுத்துறை சட்டம்

D) ரௌலட் சட்டம்

65) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு.

i ) முதல் உலகப்போரில், நேசநாடுகளுக்கு எதிராக முக்கூட்டு நாடுகளுக்கு ஆதரவாக துருக்கி சுல்தான் களம் இறங்கி பிரிட்டனைத் தாக்கினார்.

ii ) கலீபா மற்றும் இசுலாமிய புனிதத் தலங்களின் பொறுப்பாளராகத் துருக்கிய சுல்தான் விளங்கினார்.

iii ) போருக்குப் பிறகு துருக்கியின் நிலையைப் பலவீனப்படுத்த முடிவுசெய்த பிரிட்டன் செவ்ரெஸ் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) iii ) மட்டும்

66) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு.

i ) துருக்கியின் கிழக்குப்பகுதியில் இருந்த சிரியா, லெபனான் ஆகிய நாடுகள் பிரிட்டிஷ் கட்டுப்பாட்டில் இடம்பெற்றன.

ii ) பாலஸ்தீனமும் ஜோர்டனும் பிரான்ஸின் கட்டுப்பாட்டில் இடம்பெற்றன.

iii ) கலீபாவின் அதிகாரத்தைத் துண்டாடுவது இசுலாம் மீதான பெரும் தாக்குதலாகக் கருதப்பட்டது.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) iii )

67) கீழ்க்கண்டவற்றுள் தவறான கூற்றைத் தேர்ந்தெடு

i ) மௌலானா அபுல் கலாம் ஆசாத், மௌலானா சௌஹத் அலி என்ற முஸ்லிம் சகோதரர்கள் கிலாபத் இயக்கத்தைத் தொடங்கினர்.

ii ) உலகம் முழுவதும் உள்ள முஸ்லிம்கள் கலீபா மீது பற்றி அனுதாபம் கொண்டவர்கள்.

A) i ) மட்டும்

B) ii ) மட்டும்

C) i ) மற்றும் ii )

D) இரண்டும் தவறு

68) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு.

i ) ஆட்டோமன் அரசை ஆதரிப்பதையும் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்ப்பதையும் நோக்கங்களாகக் கொண்டு கிலாபத் இயக்கம் தோன்றியது.

ii ) M.A. அன்சாரி, ஷேக் ஷௌகத் அலி சித்திக், சையது அதுல்லா ஷா புகாரி ஆகிய பல முஸ்லிம் தலைவர்கள் இந்த இயக்கத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

iii ) மார்ச் 1922இல் இலண்டனில் முகமது அலி கிலாபத் இயக்கத்தின் கோரிக்கைகளைத் தூதாண்மை அதிகாரிகளிடையே சமர்ப்பித்தார்.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

69) கீழ்க்கண்டவற்றுள் கிலாபத் இயக்கத்தின் கோரிக்கைகள் எவை?

i ) துருக்கியின் சுல்தான் கலீபாவாக இடையூறின்றித் தொடரவேண்டும்.

ii ) இசுலாமியப் புனிதத் தலங்கள் சுல்தானிடம் ஒப்படைக்கப்பட்டு அவர் அதனைக் கட்டுப்படுத்தவேண்டும்.

iii ) சுல்தானிடம் போதுமானப் பகுதிகள் தரப்பட்டு இசுலாமிய மதத்தைப் பாதுகாக்க வழிவகை செய்யப்படவேண்டும்.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

70) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) தென்னாப்பிரிக்காவில் ஆற்றிய மனிதாபிமானப் பணிகளுக்காக காந்தியடிகளுக்கு கெய்சர் – இஹிந்த் தங்கப்பதக்கம் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

ii ) ஆம்புலன்ஸ் படையில் இந்திய ஆர்வலர்களின் ஒரு அதிகாரியாகச் செயல்பட்ட அவரது சேவைகளைப் பாராட்டி ஜுலு போர் வெள்ளிப்பதக்கம் காந்தியடிகளுக்கு வழங்கப்பட்டது.

iii ) தூக்குபடுக்கை (Stretcher) கொண்டு செல்வோர் படையில் இந்திய ஆர்வலர்களின் துணைக் கண்காணிப்பாளராக சேவை புரிந்தமைக்காக போயர் போர் வெள்ளிப்பதக்கம் அவருக்கு வழங்கப்பட்டது.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

71) "கிலாபத் இயக்க விஷயத்தில் கடந்த ஒரு மாத காலமாக நடந்த நிகழ்வுகளைப் பார்க்கும்போது அரசு மீதான மதிப்பையோ அல்லது அன்பையோ என்னால் இருப்பு வைக்க இயலவில்லை" என்று கூறியவர் யார்?

A) காந்தியடிகள்

B) முகமது அலி ஜின்னா

C) கெயில் மினால்டின்

D) அபுல் கலாம் ஆசாத்

72) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) கிலாபத் இயக்கத்தின் கோரிக்கைகளுக்கும் இந்தியாவிற்கும் தொடர்பில்லை.

ii ) கலீபா பற்றிய கேள்வி மூலம் கிலாபத் இயக்கத் தலைவர்கள், பிரதேச, மொழி, வகுப்பு, பிரிவினைவாத வழிகளில் பிளவுபட்ட இந்திய முஸ்லிம் சமூகத்தை ஒன்றிணைக்க ஒரு அடையாளமாகப் பயன்படுத்தினார்கள்.

A) i ) மட்டும்

B) ii ) மட்டும்

C) i ) மற்றும் ii )

D) இரண்டும் தவறு

73) முழுமையான இந்திய இசுலாமிய அரசியல் மேம்பாட்டுக்கான வழியைத் திறக்க "முழுமையான இசுலாமிய அடையாளம் பயன்பட்டது". என்று கூறியவர் யார்?

A) காந்தியடிகள்

B) முகமது அலி ஜின்னா

C) கெயில் மினால்டின்

D) அபுல் கலாம் ஆசாத்

74) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) இந்து – முஸ்லிம் ஒற்றுமையைப் பலப்படுத்த கிலாபத் இயக்கத்தை ஒரு வாய்ப்பாகக் காந்தியடிகள் கருதினார்.

ii ) ஆந்திரப்பிரதேசத்தில் இருந்த முஸ்லிம்கள் கிலாப் (எதிர்ப்பு) என்ற அர்த்தமுடைய உருது மொழி வார்த்தையை நிர்வாகத்துக்கு எதிரான பொதுக்கிளர்ச்சியின் அடையாளமாகப் பயன்படுத்தினார்கள்.

iii ) மலபாரைச்சேர்ந்த மாப்பிள்ளைகள் இதனை நிலப்பிரபுக்களுக்கு எதிரான கிளர்ச்சியாக உருமாற்றம் செய்தனர்.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

75) ஊதியம் ஈட்டுவோராகத் தொழிற்சாலைப் பணியாளர்கள் என்ற புதிய வர்க்கத்தினர் உருவானதற்கான காரணங்களைத் தேர்ந்தெடு

i ) இயந்திரங்களின் அறிமுகம்

ii ) உற்பத்திக்கான புதிய முறைகள்

iii ) சில பெரிய மாநகரங்களில் தொழிற்சாலைகளின் பெருக்கம்

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

76) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) இந்தியாவில் பெரும்பாலும் கிராமங்களைச் சேர்ந்த தொழிற்சாலைப் பணியாளர்கள் முதலில் மிகப்பணிவுடனும் முறைசாராமலும் இருந்தனர்.

ii ) பம்பாயின் சசிபாத பானர்ஜி, மற்றும் என்.எம். லோக்காண்டே, வங்காளத்தின் சோரப்ஜி ஷபூர்ஜி ஆகியோர் தொழிற்சாலை பணியாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காகத் தங்களின் குரல்களை எழுப்பினர்

A) i ) மட்டும்

B) ii ) மட்டும்

C) i ) மற்றும் ii )

D) இரண்டும் தவறு

77) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) சுதேசி இயக்கத்தின் (1905) பின்னணியில் இந்தியத் தொழிற்சாலைகள் செயல்பட ஆரம்பித்தன.

ii ) போர்க் காலப் பொருட்களைத் தயாரித்த இந்திய தொழிற்சாலைகளுக்குப் பிரிட்டிஷார் போரின்போது ஊக்கம் தந்தனர்.

iii ) போர் தொடர்ந்து நடந்ததை அடுத்து அவர்களுக்கு அதிகப் பொருட்கள் தேவைப்பட்டன.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

78) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) போர் முடிவுக்கு வந்தவுடன் பணியாளர்களுக்கு வேலை கிடைத்ததோடு உற்பத்தியும் பெருகியது.

ii ) போருக்குப் பிந்தையச் சூழலில் விலைகளும் தாறுமாறாய் அதிகரித்தன.

iii ) உலகம் முழுவதும் பரவிய இன்ஃபுளுயன்சா (InfluenzA) தொற்றுநோயின் தாக்கத்தின் பிடியில் இந்தியாவும் சிக்கித் தவித்தது.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

79) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) 1919 ஆம் ஆண்டின் போல்ஷ்விக் புரட்சியின் வெற்றி இந்திய தொழிலாளர்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்தியது.

ii ) வகுப்புபேதம் பற்றிய விழிப்புணர்வும், அறிவார்ந்த சிந்தனையும் இந்தியத் தொழிலாளர்களின் உலகில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தின.

iii ) ஐரோப்பாவில் போரில் பங்கேற்ற இந்தியப் படைவீரர்கள் அங்கிருந்த தொழிலாளர்களின் மேம்பட்ட நிலைமை பற்றிய செய்திகளைக் கொண்டு சேர்த்தனர்.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

winmeen.com

80) கீழ்க்கண்டவற்றுள் தொழிலாளர்களிடையே பெரிய விழிப்புணர்வை ஏற்படுத்தியவற்றைத் தேர்ந்தெடு.

i ) போரால் ஏற்பட்டப் பொருளாதாரச் சிரமங்கள் காரணமாக ஏற்பட்ட தொழில் வீழ்ச்சி

ii ) வேலை கொடுப்போர் மற்றும் வேலை செய்வோருக்கிடையேயான பெரிய இடைவெளி

iii ) பல்வேறு நாடுகள் பங்கேற்புடன் சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

81) 1918இல் முதல் மதராஸ் தொழில் சங்கம் யாரால் நிறுவப்பட்டது?

A) சிங்கார வேலர்

B) திரு.வி.க

C) ஜீவானந்தம்

D) பி.பி.வாடியா

82) பின்வருவனவற்றுள் மதராஸ் தொழிற்சங்கம் அமையக் காரணமாக இருந்தவை எவை?

i ) மதிய உணவுக்கு குறுகிய கால இடைவெளி

ii ) தொழிலாளர்களுக்கு ஐரோப்பிய உதவியாளர்களின் உதவி

iii ) போதுமான ஊதியம் வழங்காதது

iv ) பணியாளர்களுக்கான பணி நிலைமைகள்

A) i ), ii ), iii ), iv )

B) i ), ii ), iii )

C) ii ), iii )

D) i ), iii ), iv )

83) பின்வருவானவற்றுள் தவறான இணையைத்தேர்ந்தெடு.

A) கல்கத்தா – இந்தியக் கடற்படை வீரர்கள் சங்கம்

B) பம்பாய் – துறைமுகப் பொறுப்புக் கழக ஊழியர் சங்கம்

C) பஞ்சாப் – பத்திரிகை ஊழியர்கள் சங்கம்

D) ஜாரியா – அஞ்சல் பணியாளர்கள் சங்கம்

84) பின்வருவானவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு.

i ) தொழிலாளர் இயக்கத்தை அடக்கும் நோக்கில், பணமுதலாளிகளின் உதவியோடு அரசு தொழிலாளர்களைக் கீழ் நிலையில் வைத்திருக்க அனைத்து வழிகளிலும் முயன்றது.

ii ) வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டோரைக் கைது செய்வது, அவர்களின் வீடுகளைத் தீயிட்டுக் கொளுத்திய தோடு தொழிற்சங்கங்களுக்கு அபராதங்களையும் விதித்தனர்.

iii ) தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளில் வலுவாக இருந்தனர்.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

85) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) பணியாளர்களின் நிலைமை கண்டு இரக்கம்கொண்ட தேசியவாதத் தலைவர்களும் அறிவுஜீவிகளும் அவர்களைத் தொழிற்சங்கங்கள் மூலமாகச் செயல்பட வைக்க தீவிரம் காட்டினர்.

ii ) பணியாளர் வகுப்பின் அரசியல் வாழ்க்கைக்கு இவர்களது ஈடுபாடும் ஒரு காரணமாக அமைந்தது.

iii ) பெரும்பான்மையான ஆலைகளின் உரிமையாளர்களாக இந்தியர்கள் இருந்ததால் அரசு அவர்களை எதிர்த்தது.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

86) அகில இந்தியத் தொழிற்சங்க காங்கிரஸ் (AITUC) யாருடைய தலைமையில் நிறுவப்பட்டது?

A) அரவிந்த கோஷ்

B) லாலா லஜபதி ராய்

C) திலகர்

D) தாதா பாய் நௌரோஜி

87) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) தொழிற்சங்கங்கள் மெதுவாக தேசிய இயக்கத்தில் ஈடுபட்டன.

ii ) ஏப்ரல் 1918 இல் ஜாலியன் வாலாபாக் படுகொலை மற்றும் காந்தியடிகளின் கைதுக்குப் பிறகு உழைக்கும் வகுப்பினர் வேலைநிறுத்தங்கள், போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்

A) i ) மட்டும்

B) ii ) மட்டும்

C) i ) மற்றும் ii )

D) இரண்டும் தவறு

88) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) அரசு அல்லது முதலாளிகளால் முதலில் தொழிற்சங்கங்கள் அங்கீகரிக்கப்படவில்லை.

ii ) தொழிலாளர்களின் ஒற்றுமை மற்றும் அவர்களின் இயக்கத்தின் வலிமை காரணமாக அரசும் முதலாளிகளும் அவர்களை அங்கீகரிக்கக் கட்டாயப்படுத்தப்பட்டன.

iii ) 1919 – 20இல் 107 ஆக இருந்த பதிவு பெற்ற தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை 1946 – 47இல் 1833 ஆக அதிகரித்தது.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )